## வரையறுக்கப்பட்ட விமானநிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி – 2015

---

வரையறுக்கப்பட்ட விமானநிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின் (''கம்பனி'') 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு பொதுத் தொழிலுள்ள பட்டயக் கணக்காளர்கள் நிறுவனமொன்று எனக்கு உதவியது.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் இந்த அறிக்கை வழங்கப்பட்டுள்ளது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (''சபை'') பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் (2.2 ஆம் பந்தி) விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வரையறுக்கப்பட்ட விமானநிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 26,564,560,367 கொண்டுசெல்லும் தொகையுடனான மத்தல ராஜபக்ச சர்வதேச விமானநிலையம் (எம்ஆர்ஐஏ) தொடர்பான ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தை நிதி நிலைமைக் கூற்று உள்ளடக்குகின்றது. ஆரம்பத்திலிருந்து எம்ஆர்ஐஏ இன் செயற்பாடுகள் சரிவடைந்து காணப்பட்டதுடன் பிரயாணி அசைவுகள் 2015 சனவரியில் 2,620 இலிருந்து 2016 மேயில் 349 வரை குறைவடைந்ததுடன் இரண்டு விமானங்களிற்கு விமான அசைவுகள் தற்போது மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. **எல்கேஏஎஸ் 36, சொத்துக்களிற்கான காலக்கழிவின்** பிரகாரம், எம்ஆர்ஐஏ இன் பொருளாதார செயலாற்றல் அண்மைய எதிர்காலத்தில் தேறுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருக்காத விமானநிலையத்தின் முழுச் சாத்தியத்தன்மையுடன் இந்த அறிக்கைத் திகதியில் வீழ்ச்சியடைந்திருந்ததால் காலக்கழிவு குறிகாட்டிகளாக இருக்கவேண்டுமென இவற்றை நான் கருதுகின்றேன். எவ்வாறாயினும், முகாமைத்துவம் தனியான காசு உருவாக்கல் பிரிவு இருக்கின்றதென்ற அடிப்படையில் எம்ஆர்ஐஏ காலக்கழிவிடப்படலாம் என்பதற்கு ஏதாவது சுட்டிக்காட்டல் உள்ளதா என செவ்வை பார்ப்பதற்கு காலக்கழிவு மதிப்பீட்டை மேற்கொண்டிருக்காததுடன் அதன் மூலம் 2015 திசெம்பர் இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் பதிவுசெய்யப்பட்ட தொகைகளுக்கு ஏதாவது காலக்கழிவு பதிவழித்தல் பிரயோகிக்கப்பட வேண்டுமா என்பதை தீர்மானிப்பதற்கு காலக்கழிவு பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எம்ஆர்ஐஏ இன் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் அறவிடக்கூடிய தொகையை மதிப்பிடுவதற்கான தகவலில்லாத போது 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் கொண்டுசெல்லும் தொகை குறித்து என்னால் திருப்தியடைய முடியாதிருந்தது.

### 2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 03 பூர்த்திசெய்யப்பட்ட நிர்மாணங்களுடன் தொடர்புடைய ரூபா 43.5 மில்லியன் மொத்தக் கிரயமானது அந்தச் சொத்துக்கள் பயன்பாட்டிற்காக கிடைக்கத்தக்கதாக இருந்த போதிலும் மூலதனமாக்கப்பட்டு நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை. மேலும், ரூபா 3.5 மில்லியன் தொகையான அவற்றின் மீதான பெறுமானத்தேய்வு மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 59 மில்லியன் பெறுமதியான மூன்று விடயங்கள் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு கம்பனியால் ஏற்கனவே பெறப்பட்டு அவை அலுவலக வளாகத்தில் பௌதீக ரீதியாக காணப்பட்டும் இருந்த போதும் வழியிலுள்ள பொருட்கள் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(இ) ரூபா 6,676 மில்லியன் பெறுமதியான சீராக்கங்கள் கணக்காய்விற்கு வரைபு நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்ததன் பின்னர் 145 நாட்குறிப்பு பதிவுகளின் ஊடாக மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஆகையால். மாதிரிக்கு வெளியில் ஏதேனும் மேலும் குறைபாடுகள் மற்றும்/ அல்லது சீராக்கங்கள் நிலவுகின்ற சாத்தியத்தன்மையை கணக்காய்விற்கு உட்படுத்தமுடியாதுள்ளது.

### 2.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

ரூபா 13 மில்லியன் கூட்டுத்தொகையான செலுத்த வேண்டிய மீதிகள் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு ஒரு வருடத்திற்கு மேலாக நிலுவையாகவிருந்தன. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அவற்றை தெளிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 6 ஆம் பிரிவு | புதிய கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் மீளப் பதிவுசெய்யப்பட்ட பின்னர் கம்பனியானது அதன் பெயரை ‘‘வரையறுக்கப்பட்ட (தனியார்)’’ அல்லது ‘‘(தனியார்) எல்ரிடி’’ என்ற சுருக்கத்தை பின்னால் இணைப்பதன் மூலம் பொது ஆவணங்களில் வெளிப்படுத்துதல் வேண்டப்பட்டிருந்த போதிலும் கம்பனி இதனுடன் இணங்கியிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள்<br>- நிதிப்பிரமாணம் 395(இ) | தொடர்ந்து வரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் பத்து (10) வங்கிக் கணக்குகள் தொடர்பில் இதனுடன் இணங்கியிருக்கவில்லை. |
| (இ) 2006 ஏப்ரல் 28 ஆந் திகதிய பிஈ/சீஓஎம்சி/33/02 ஆம் இலக்க திறைசேரி பிரதிச் செயலாளரின் கடிதம் | அரசாங்கத்திற்கு சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள், ஏனைய அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள் பெறுமதியிடப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| | கம்பனிக்கு மற்றப்பட்டிருந்த தேறிய சொத்துக்களிற்காக இலங்கை அரசாங்கத்திற்குரிய பங்குகள் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) நல்லாளுகைக்கான பொது முயற்சிகள் வழிகாட்டிகள் மீதான 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றிக்கை | |
| (i) 7.4.5 ஆம் பிரிவு | சொத்துகளின் மெய்மையாய்வை மேற்கொள்வதற்கு வருடாந்த பொருட் கணக்கெடுப்பு சபை மற்றும் விசேட மெய்மையாய்வு சபைகள் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 9.2 (ஈ) பிரிவு | கம்பனியின் அமைப்பு வரைபடம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் என்பன பொது முயற்சிகள் திணைக்களம், பொதுத் திறைசேரி என்பவற்றில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (iii) 9.3.1 (i) ஆம் பிரிவு | கம்பனியின் ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பதவியுயர்வுகள் (எஸ்ஓஆர்) திட்டம் பொதுத் திறைசேரியின் ஒத்துழைப்புடன் அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) 2015 மே 07 இல் நடைபெற்ற கூட்டக் குறிப்புகள் - விடயம் (ஈ) | ரூபா 10 மில்லியனை விஞ்சிய அனைத்து நாட்குறிப்பு பதிவுகளும் அவற்றை செயன்முறைப்படுத்த முன்னர் நிதித் தலைவரால் அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 1,334,050,000 திரண்ட பெறுமதியுடன் ரூபா 10 மில்லியனை விஞ்சிய நான்கு நாட்குறிப்பு பதிவுகள் குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், கம்பனியின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் ரூபா 3,411,715,156 வரிக்கு முன்னரான தேறியலாபத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 816,855,571 ஆன வரிக்கு முன்னரான தேறியலாபத்தினை விளைவித்திருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 2,594,859,585 ஆன வீழ்ச்சியினை சுட்டிக்காட்டுகின்றது. மீளாய்வாண்டின் போது ஏற்பட்ட ரூபா 3,525,237,920 தொகையான நிதி நடவடிக்கைகள் மீதான பரிமாற்ற நட்டம் நிதிசார் விளைவுகளில் ஏற்பட்ட இந்த வீழ்ச்சிக்கான பிரதான காரணமாக பங்களித்திருந்தது.

## 3.2 பெறுமதி சேர்க்கை

2011 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை கம்பனியின் பெறுமதிச் சேர்க்கை படிப்படியாக அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் இது ரூபா 2,389 மில்லியனால் குறைவடைந்திருந்தது. இது 17 சதவீத குறைவாக உள்ளது. (தயவுசெய்து பின்னிணைப்பை பார்க்கவும்)

2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் பரிமாற்ற நட்டத் தாக்கம் நீக்கப்படுவதால் மொத்த பெறுமதிச் சேர்கை ரூபா 2,155 மில்லியனால் அதிகரித்திருந்தது என தலைவர் எனக்கு அறிவித்திருந்தார்.

## 3.3 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

### 3.3.1 முக்கிய கணக்கீட்டு விகிதங்கள்

கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய நான்கு ஆண்டுகளிற்கான கம்பனியின் முக்கிய சில கணக்கீட்டு விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2015 | 2014 | 2013 | 2012 | 2011 |
|---|---|---|---|---|---|
| நடைமுறைச் சொத்துக்கள் விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 2.09 | 1.95 | 1.29 | 1.79 | 2.65 |
| ஊழியரொருவருக்கான சொத்துக்கள் (ரூபா ‘000) | 16,865 | 15,105 | 15,316 | 14,378 | 10,972 |
| ஊழியரொருவருக்கான பதவியணிக் கிரயம் (ரூபா ‘000) | 1,417 | 1,088 | 1,135 | 1,020 | 942 |
| ஊழியரொருவருக்கான விமான அசைவு (தடவைகளின் எண்ணிக்கை) | 15 | 14 | 14 | 14 | 13 |
| ஊழியரொருவருக்கான பிரயாணிகளின் எண்ணிக்கை | 2,197 | 1,979 | 1,995 | 2,055 | 1,859 |
| ஊழியரொருவருக்கான – சரக்கு ஏற்றுதல் (மெற்றிக் தொன்கள்) | 57 | 53 | 52 | 54 | 51 |
| சரக்கு ஏற்றுதல் ஒவ்வொன்றுக்குமான தேறிய செயற்பாட்டுக் கிரயம் (ரூபா ‘000) | 237 | 171 | 177 | 146 | 176 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நடைமுறை விகிதத்தில் ஏற்பட்ட அதிகரிப்பானது மீள் கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் திறைசேரி உண்டியல்களில் செய்யப்பட்ட முதலீடுகள் 76 சதவீதத்தால் அதிகரித்தமை பிரதான காரணமாக உள்ளது.

(ஆ) சரக்கு ஏற்றுதல் ஒவ்வொன்றுக்குமான தேறிய செயற்பாட்டுக் கிரயம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் 39 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### செயலாற்றல்

கம்பனியின் நீண்டகால கூட்டிணைந்த நோக்கங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(i) மொத்தப் பிரயாணிகளுக்கான போக்குவரத்திலுள்ள பிரயாணிகள் விகித்தை ஏற்கனவேயிருந்த 1:7 விகிதத்திலிருந்து 2018 அளவில் 1:5 வரை அதிகரிப்பதன் மூலம் ஆசியா பிராந்தியத்தில் பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலைய (பீஐஏ) பிரயாணிகள் போக்குவரத்து மையமொன்றை ஏற்படுத்துதல்.

(ii) 2019 அளவில் 15 மில்லியன் பிரயாணிகளை கையாள்வதற்காக உணவளிப்பதற்கான உட்கட்டமைப்பு இயலளவை ஸ்தாபித்தல்.

(iii) பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் (பீஐஏ) விமானம் இறங்குவதற்கான சேவைக் கிரய ஏற்பாட்டினை 2015 இன் அதே சதவீதத்திலிருந்து 2018 அளவில் 10 சதவீதத்தால் குறைத்தல்.

(iv) 2018 அளவில் 10 மில்லியனிற்கு பயணிகள் எண்ணிக்கையை அதிகரித்தல்.

(v) 2017 அளவில் மொத்த விமானப் போக்குவரத்துச் சரக்கில் மாற்றப்படுகின்ற சரக்கின் 40 சதவீதத்தை அடைதல்.

(vi) 2017 ஆம் ஆண்டின் இறுதியளவில் ஆகக்குறைந்தது ஐ.அ.டொலர் 0.5 மில்லியனை உழைப்பதன் மூலம் சிவில் விமானசேவை பயிற்சி நிலையம் நியாயமானதாக சுயமாக நிலைத்திருத்தல்.

(vii) பிராந்திய ரீதியான நிலைப்படுத்தலில் விமான நிலைய செயலாற்றலில் உயர்ந்துசெல்லும் போக்கினை பேணுதல்.

(viii) விமான விபத்துக்களை நோக்கிய பங்களிப்பில் குறைந்துசெல்லும் போக்கினை பேணுதல்.

(ix) சர்வதேச சிவில் விமானசேவை நிறுவன (ஐசீஏஓ) ஆவணம் 8973 இல் குறித்துரைக்கப்பட்டவாறு சர்வதேச சிவில் விமான சேவையின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல்.

(x) இணைந்த டாஸ்போட்டில் (Corporate Dashboard) வாடிக்கையாளர் நோக்கு அதே போல் நிதிசார் நோக்கிற்காக ஆகக்குறைந்தது 20 சதவீத புள்ளியை பேணுவதன் மூலம் அனைத்து விமானநிலைய பங்குதார்களுடனும் இணைந்து சேவை, பெறுமதி மற்றும் செயற்பாட்டுரீதியான நிபுணத்துவம் என்பவற்றை பின்பற்றுதல்.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மேற்குறிப்பிட்ட கூட்டிணைந்த நோக்கங்களின் அடைதல் தொடர்பான பௌதீகரீதியான செயலாற்றல் கீழே தரப்படுகின்றன.

| செயலாற்றல் குறிகாட்டி | 2015 | 2014 | 2013 | 2012 | 2011 |
|---|---|---|---|---|---|
| -------------------------------------- | ------- | ------- | ------- | ------- | ------- |
| சர்வதேச விமான அசைவுகளின் எண்ணிக்கை | 56,156 | 54,960 | 51,972 | 48,416 | 43,454 |
| பிரயாணி அசைவுகளின் எண்ணிக்கை | 8,505,740 | 7,780,724 | 7,330,421 | 7,079,920 | 6,145,532 |
| சரக்கு அசைவுகளின் எண்ணிக்கை (மெற்றிக் தொன்கள்) | 220,422 | 209,607 | 194,020 | 186,618 | 168,577 |

(i) சர்வதேச விமான அசைவுகளின் எண்ணிக்கை முன்னைய 05 ஆண்டுகளின் போது படிப்படியாக அதிகரித்திருந்த போதிலும் அதிகரிப்பின் போக்கு 2011 ஆம் ஆண்டில் 27.5 சதவீதத்திலிருந்து 2015 ஆம் ஆண்டில் 2.2 சதவீதத்திற்கு குறைவடைந்திருந்தது.

(ii) 2011 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை பிரயாணிகளின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்திருந்த போதிலும் அதிகரித்தல் போக்கு 2011 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரை குறைவடைந்திருந்தது. 2013 தொடக்கம் 2015 வரையான காலப்பகுதியின் போது இந்த போக்கில் எல்லை அதிகரிப்பொன்று இருந்தது. அதேநேரம் சரக்கு அசைவுகள் மீளாய்வாண்டின் போது 2.8 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(ஆ) ஐ.அ.டொலர் 190 மில்லியன் வெளிநாட்டுக் கடனின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட மத்தல ராஜபக்ச சர்வதேச விமானநிலையத்தின் (எம்ஆர்ஐஏ) செயலாற்றல்.

| செயலாற்றல் குறிகாட்டி | 2015 | 2014 | 2013 |
|---|---|---|---|
| -------------------------------------- | -------- | --------- | ---------- |
| பிரயாணி அசைவுகளின் எண்ணிக்கை | 6,291 | 40,386 | 36,137 |
| சர்வதேச விமான அசைவுகளின் எண்ணிக்கை | 1,044 | 2,890 | 1,451 |
| சரக்கு அசைவுகளின் எண்ணிக்கை (மெற்றிக் தொன்கள்) | 19 | 221.9 | 64 |
| மொத்த வருமானம் (ரூபா) | 71,430,816 | 136,264,763 | 48,010,898 |
| மொத்த செயற்பாட்டுச் செலவினம் (ரூபா) | 2,288,694,851 | 2,228,465,247 | 1,776,140,280 |
| செயற்பாட்டு நட்டம் (ரூபா) | 2,217,264,035 | 2,092,200,483 | 1,728,129,382 |
| நிதிச் செலவினம் (ரூபா) | 881,966,545 | 637,001,196 | 377,169,000 |
| தேறிய நட்டம் (ரூபா) | 3,099,230,580 | 2,729,201,680 | 2,105,298,382 |

அதற்கிணங்க, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது மத்தல ராஜபக்ச சர்வதேச விமானநிலையத்தின் (எம்ஆர்ஐஏ) செயலாற்றல் கடுமையாக வீழ்ச்சியடைகின்றமை அவதானிக்கப்பட்டது

**4.2 முகாமைத்துவப் பலவீனங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவன வள திட்டமிடல் (ஈஆர்பி) முறைமையொன்றை அமுல்படுத்தல் ஒப்பந்தம் ரூபா 248.6 மில்லியன் தொகைக்காக 08 மாத காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்யப்படுவதற்கு 2012 யூன் 29 இல் தனியார் கம்பனியொன்றுக்கு வழங்கப்பட்டிருந்தது. கம்பனியானது ரூபா 27,464,632 தொகையை ஒப்பந்ததாரருக்கு செலுத்தியிருந்ததுடன் ஒப்பந்த காலப்பகுதி நான்கு சந்தர்ப்பங்களில் நீடிக்கப்பட்டும் இருந்தது. ஒப்பந்தம் வழங்கப்பட்டதிலிருந்து 04 ஆண்டுகளை விஞ்சிய காலப்பகுதி கடந்திருந்த போதிலும் 2016 ஒக்தோபர் 31 வரையிலும் செயற்திட்டத்தை முழுமையாக பூர்த்தி செய்வதற்கு ஒப்பந்ததாரர் தவறியிருந்தார்.

(ஆ) 2002 ஆம் ஆண்டில் ரூபா 5.6 மில்லியன் மற்றும் 2003 ஆம் ஆண்டில் ரூபா 1.4 மில்லியன் கொடுப்பனவு உள்ளடங்கலாக ரூபா 7 மில்லியன் தொகையை செலவிடுவதன் மூலம் தனியார் தரப்பினரிடமிருந்து காணியொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. பின்னர், கதிர்காமம் பிரதேச செயலகம் அந்தக் காணி அரசாங்கத்திற்கு சொந்தமானது என அறிவித்திருந்தது. அதன் பின்னர் ரூபா 460,000 வருடாந்த குத்தகை வாடகைக்காக 2008 சனவரி 10 இலிருந்து அமுலுக்கு வரும் வகையில் 30 வருட குத்தகையொன்றிற்கு காணி பெறப்பட்டிருந்தது. இருந்த போதிலும், 2002 மற்றும் 2003 இல் தனியார் தரப்பினருக்கு ரூபா 7 மில்லியன் தொகையை அறவடுவதற்கு கம்பனி தவறியிருந்தது. மேலும், இந்த பணத்தின் அறவிடும் தன்மை நிச்சயமற்றதாக இருந்தது.

**4.3 மனித வளங்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிரதேச தலைவர்கள் பதவிகளிற்கு அப் பதவிகள் நிரந்தரமாக நிரப்பப்படாமல் நான்கு பிரதி பிரதேச தலைவர்கள் 2016 மே 10 வரை 01 தொடக்கம் 05 ஆணடுகள் வரையான காலவீச்சொன்றிற்கு நியமிக்கப்பட்டிருந்தனர்.

(ஆ) வரிசை அமைச்சு மற்றும் பொதுத் திறைசேரியிடமிருந்தான அங்கீகாரமில்லாமல் 2011 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை ஊழியரொருவருக்கான பதவியணி கிரயம் ரூபா 942,000 இலிருந்து ரூபா 1,417,000 வரை அதிகரித்திருந்தது.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்கு காலம் கம்பனியின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | கட்டுப்பாட்டுப்பரப்பு | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | மனிதவள முகாமைத்துவம் | பொதுத் திறைசேரியின் ஒத்துழைப்புடன் குறிப்பிட்ட அமைச்சால் பதவியனி மற்றும் ஆட்சேர்ப்புத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | கணக்கீடு | கம்பனியில் விரிவான கணக்கீட்டு முறைமையொன்று இருக்கவில்லை. |
| (இ) | பெறவேண்டியவைகளும் செலுத்தவேண்டியவைகளும் | நீண்டகால நிலுவை மீதிகள் கணக்குகளில் தெளிவாக்கப்படாமல் அல்லது/ மற்றும் தீர்ப்பனவு செய்யப்படாமலிருந்தன. |
| (ஈ) | சொத்து முகாமைத்துவம் | பொருள் மெய்மையாய்வு மற்றும் சொத்து மதிப்பீடு மேற்கொள்ளப்படவில்லை. |

**பின்னிணைப்பு**

| **விபரம்** | **2015** | **2014** | **2013** | **2012** | **2011** |
|---|---|---|---|---|---|
| | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** |
| வரிக்குப் பின்னரான இலாபம் (பங்கிலாபங்களின் கொடுப்பனவிற்கு முன்னர்) | 817 | 3,412 | 3,554 | 2,738 | 1,389 |
| **<u>கூட்டு:-</u>** | | | | | |
| ஊழியர் வேதனம் | 5,658 | 4,729 | 4,170 | 3,515 | 3,114 |
| அரசாங்கத்திற்கு செலுத்தப்பட்ட பங்கிலாபங்கள் | 350 | 497 | 750 | 795 | 1,009 |
| அரசாங்கத்திற்கு செலுத்தப்பட்ட வரிகள் | | | | | |
| - வருமான வரி | 1,561 | 2,211 | 1,192 | 1,121 | 751 |
| - பீரீரீ/ என்பீரீ | - | - | - | - | 19 |
| - சுங்கத் தீர்வை | 36 | 34 | 45 | 117 | 66 |
| - வற் | 579 | 504 | 409 | 403 | 412 |
| ஏனைய தீர்வைகள் | 39 | 39 | 19 | 19 | 19 |
| பெறுமானத்தேய்வு | 2,630 | 2,633 | 1,751 | 1,011 | 1,135 |
| பெறுமதிச் சேர்க்கையின் மொத்தம் | **11,670** | **14,059** | **11,890** | **9,719** | **7,914** |